**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**
**S.T.C.: 564 of 2024**

**DATE : 16.12.2025**

**Depositions of witness for Prosecution**

**PW: 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | சேவுக பாண்டியன் | **Caste** | |
| **Father/ Husband's Name** | ராஜ் | **Calling** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of December 2025**

**( எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை)**

**முதல் விசாரணை : –**

1) நான் வத்திராயிருப்பு புதுப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் எதிரிகளை எனக்கு தெரியும். நானும், ஆஜர் எதிரிகளும் சமாதானமாக சென்று விட்டோம். ஆஜர் எதிரிகள் என்னை தகாத வார்த்தையால் பேசி தாக்கி காயப்படுத்த வில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை**

**குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தினை யார் எழுதினார்கள் என்றால், போலீஸார்கள் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். எனக்கு காயம் ஏற்பட்டு நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் பொழுது, நான் சொல்ல சொல்ல போலீசார்கள் எழுதிக் கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதை நான் படித்துப் பார்த்துவிட்டு தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

வழக்கு சமயத்தின் போது எனக்கும் எனது மனைவிக்கும் கருத்து வேறுபாடு இருந்து வந்தது என்றால் சரிதான். அதன் காரணமாக கடந்த 07.04.2024 மாலை 04.30 மணியளவில் அன்று எதிரிகள் என்னை கம்பால் தலை மற்றும் கால் முட்டியில் தாக்கி காயப்படுத்தினார்கள் என்றால் சரிதான். எதிரிகள் என்னை தாக்கி விட்டு சம்பவ இடத்திலிருந்து சென்று விட்டார்கள் என்றும், அதன் பின்பு நான் மருத்துவமனைக்கு சிகிச்சையை சேர்ந்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்றது உண்மை என்றும், எதிரிகள் என்னை மிரட்டியதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : – இல்லை**

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு